# சகல கட்சிகளும் ஏற்கும் வகையில் இலங்கை அரசு அரசியல் தீர்வைக் காண வேண்டியது அவசியம்

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 9-8-86 சனி (ஆடி 24 துல்ஹ 21 முழக்கம் 186

## வியாழன் இரவு ஜனாதிபதியை சந்தித்து டிக்ஸிற் வேண்டுதல்

இலங்கை இனப் பிரச்சினைக்கு கூடிய விரைவில் நல்லதொரு தீர்வினைக் காண்பதற்கு இந்திய அரசினதும், பிரதமர் ராஜீவ் காந்தியினதும் ஆதரவினைத் தான் நாடுவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மாளிகையில் வைத்து தன்னை நேற்று முன்தினம் இரவு சந்தித்த இந்திய தூதுவர் திரு. ஜே என். டிக்ஸிற்றிடமே ஜனாதிபதி இக்கருத்தினை தெரிவித்தார். இனப் பிரச்சினை தீர்வு பேச்சுவார்த்தை தொடர்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் மீண்டும் இலங்கை வருவதை தான் எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். தூதுவர் திரு. டிக்ஸிற் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியாவின் ஆதரவினை ஜனாதிபதிக்கு மீண்டும் தெரிவித்ததோடு, இது சம்பந்தமாக இந்தியா அதிகளவு அக்கறை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். இப் பிரச்சினைக்கு சகல கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் நல்லதொரு (6ம் பக்கம் பார்க்க)

★ வீடுகளில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டனராம்!

# ஊர்காவற்படையிலுள்ள பலர் வவுனியா ராணுவத்தால் கைது!

## துவக்குகள் பறிக்கப்பட்டன!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள சூடுவென்ற சிலவு என்ற இடத்திலுள்ள சில தமிழர் வீடுகளில் கடந்த சில தினங்களாக இடம் பெற்று வந்த கொள்ளைச் சம்பவங்கள் சம்பந்தமாக பத்துக்கும் அதிகமான ஊர்காவற்படையினர் ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட துப்பாக்கிகளைக் காட்டிப் பயமுறுத்தியே இவர்கள் கொள்ளைகளை நடத்தியதாகவும், சில வீடுகளில் பெண்களை மானபங்கப்படுத்த இவர்கள் முயற்சித்ததாகவும் ராணுவத்தினருக்குக் கிடைத்த புகார்களையடுத்து இடம்பெற்ற விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கைதானவர்களில் அநேகம் பேரும் சிங்களவர்களாவர். இவர்களிடமிருந்த துப்பாக்கிகள் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டன.

இவர்களது வீடுகள் நேற்றிரவு ராணுவத்தினரால் சோதனையிடப்பட்டதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஊர்காவற்படையினர் கைது செய்யப்பட்ட விபரம் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் உபதலைவர் ஜனூப் அப்துல்லாவுக்கு, வவுனியா மாவட்ட சிவில் நிர்வாக இணைப்பதிகாரி கேர்ணல் இரத்திநாயக்காவால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

19-ம் திகதி முதல்

## புதிய ராணுவ இணைப்பதிகாரி

வடபகுதிப் பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் திரு. எச். எவ். ரூபசிங்கா இம் மாதம் பத்தொன்பதாம் திகதி முதல் இங்கிருந்து செல்கிறார்.

புதிய இணைப்பதிகாரியாக பிரிகேடியர் திரு. ஜெரி சில்வா —6ம் பக்கம் பார்க்க

## பி.பி.ஸி. கொழும்பு நிருபரை வெளியேறுமாறு உத்தரவு

லண்டன் பி. பி. ஸியின் கொழும்பு நிருபராகக் கடமை புரிந்த ஹம்றி ஹொக்ஸியை இலங்கையிலிருந்து வெளியேறுமாறு அரசு பணித்துள்ளது. இவர் இலங்கையில் தங்கியிருப்பதற்கான விசா கடந்த வாரம் முடிவடைந்திருந்தது. இதனையடுத்து இவர் புதிய விசாவுக்கு விண்ணப்பித்த போது அதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டதோடு இலங்கையை விட்டுவெளியேறுமாறு அரசு பணித்துள்ளது.

திரு. ஹொக்ஸி கடந்த ஆறு மாத காலமாக பி. பி. ஸியின் இலங்கை நிருபராகக் கடமைபுரிந்து வந்தார். பல தடவைகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து உண்மை நிலையை அறிந்து செய்திகளை இவர் அனுப்பிவந்தார். நடுநிலைமை —6ம் பக்கம் பார்க்க

## புங்குடுதீவு இளைஞர்களில் ஒருவர் நேற்று விடுதலை

கடந்த வாரம் வவுனியாவில் கைதான இளைஞர்களில் ஏழு பேர் நேற்று ராணுவத்தினரால் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் புங்குடுதீவைச் சேர்ந்த சுப்பையா பாலசிங்கமும் ஒருவராவர். வெளிநாட்டுக்குச் செல்வதற்காக கொழும்பு செல்லும் வழியில் இவர் கைது செய்யப்பட்டார்.

இவருடன் கைதான மற்றொரு புங்குடுதீவு இளைஞரான சின்னையா சின்னத்துரை நேற்று விடுவிக்கப்படவில்லை. இவர் தொடர்ந்து விசாரிக்கப் பட்டுவருவதாக தெரிவிக்கப் — 6ஆம் பக்கம் பார்க்க

கிளிநொச்சி

## ஆஸ்பத்திரி ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப மறுப்பு

கிளிநொச்சி வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் உடனடியாகக் கடமைக்குத் திரும்ப வேண்டும் என்று கிளிநொச்சி இராணுவ உயர் அதிகாரி அறிவித்துள்ள போதிலும் ஊழியர்கள் இது பற்றிய இறுதி முடிவெதனையும் இது வரை எடுக்கவில்லை.

இரண்டு மாதங்களுக்கு முன்பாக இராணுவத்திற்கும் போராளிகளுக்கும் இடையே இங்கு மோதல் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து கிளி —6ஆம் பக்கம் பார்க்க

## மயக்கத்தைத் தருகின்ற புதிய வானொலி ஒலிபரப்பு

'தமிழீழத்தின் குரல்' என்ற பெயரில இனந்தெரியாத குழு ஒன்றினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய வானொலி ஒலிபரப்பு பலரையும் பெரிதும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதே பெயரில 'புளொட்' இயக்கத்தினால் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக வானொலி ஒலிபரப்பு ஒன்று நடைபெற்று வருகிறது. வாரத்தில் மூன்று தினங்கள் நடைபெறும் இவ் ஒலிபரப்பில், புதிய 'தமிழீழத்தின் குரல்' அரசாங்கத்தினுடைய திட்டமிட்ட ஒலிபரப்பு எனவும் இதனை நம்பவேண்டாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

புதிய ஒலிபரப்பை நடத்துபவர்கள் தம்மை யார் என்று இதுவரை தெளிவாக அடை — 6-ம் பக்கம் பார்க்க

## கம்பியூட்டர் தயாரித்த ஓய்வூதியப் பற்றுச்சீட்டு

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோர் இந்த மாதம் முதல் ஓய்வூதியம் பெறுவதற்கு கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்பட்ட ஓய்வூதியப் பற்றுச் சீட்டையே வங்கிகளில் சமர்ப்பிக்க வேண்டுமென யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

1986 ஜூன் மாதத்திலிருந்து கம்பியூட்டர் மூலம் அச்சடிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களைப் பாவித்து ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வ —6ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழகத்தில் நேற்றும் பகிஷ்கரிப்புப் போராட்டம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றும் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து மறியல் போராட்டத்தை மேற்கொண்டார்கள். இதனால் நிர்வாக பீடங்களும் இயங்கவில்லை.

இங்கு சமீபத்தில் இடம்பெற்ற ருக்கிங் பிரச்சினை சம்பந்தமாக மாணவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை நிர்வாகம் நிறைவேற்ற வேண்டுமெனக் கோரியே இப் பகிஷ்கரிப்பு இடம் பெறுகிறது.

விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட மூன்று மாணவரும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்துக்குள்ளே அல்லது வெளியே எந்த ஒரு மாணவரையாவது வேறு ஒருவரையாவது துன்புறுத்தக் கூடாதெனவும், குறிப்பாக புதிய எந்தவொரு மாணவரும் உளவியல் ரீதியாகவோ, அல்லது உடலியல் ரீதியாகவோ பாதிப்படையும் வகையில் துன்புறுத்தப் படுவதைப் பல்கலைக்கழகம் முற்றாகத் தடைசெய்துள்ளது எனவும் துணைவேந்தர் ஏற்கனவே அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## முல்லைதீவு முகாமிலுள்ள திரியாய் அகதிகளை உடன் வெளியேற உத்தரவு

(முல்லைத்தீவு)

கடந்த இனக்கலவரங்களை அடுத்து திருமலை மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கியுள்ள அகதிகளில் திரியாய் என்ற கிராம மக்களையே தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் செல்லுமாறு அரசாங்கத்தால் உத்தரவு பிறப்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமலை மாவட்டத்தில் திரியாய் எனும் கிராமத்தில் கலவரம் எதுவுமின்றி மக்கள் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும், எனவே அக்கிராம வாசிகள் அங்கு சென்று வாழ்வதில் எவ்விதபிரச்சினையும் இல்லை எனவும் தெரிவித்த அதிகாரி, இவ்வூர்மக்களுக்கு ஆகஸ்ட் மாதத்தில் முதல் வாரத்துக்கு மட்டும் உணவுப் பொருட்கள் வழங்க அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## நெடுந்தீவுக்கு கொத்தணி

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் அமைந்துள்ள பத்துப் பாடசாலைகளையும் இணைத்த கொத்தணி அமைப்பு முறை செப்டம்பர் மாதம் முதல் செயற்படவுள்ளது. இம் முறை ஆரம்பிக்கப்படுவதனால் —6ம் பக்கம் பார்க்க

## அருள்நாதன் குடும்பத்துக்கு நிதி

கிளிநொச்சியில் லொறி மீது ஷெல் தாக்கியதில் லொறியுடன் எரிந்து மரணமான யாழ். செயலக சாரதி அருள்நாதனின் குடும்பத்துக்கென செயலக, யாழ். மாவட்டசபை ஊழியர்களினுல் சேகரிக்கப்பட்ட பதினுருயிரத்து நூறு ரூபா நேற்று முன்தினம் திருமதி அருள்நாதனின் குடும்பத்திடம் கையளிக்கப்பட்டது.

## இணக்கசபை புனரமைப்பு

(புலோலி)

வடமராட்சி தெற்கு, மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கரவெட்டி கிழக்குப் பகுதிக்கான இணக்கசபை புனரமைப்புக் கூட்டம் யாக்கரு விநாயகர் வித்தியாலய மண்டபத்தில் கிராமசேவை அலுவலர் திரு. ஏ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தலைவராக திரு. எஸ். கந்தையா (இளைப்பாறிய இலங்கை போக்குவரத்துச் சபை பிரதம பரிசோதகர்)வும், உப தலைவராக திரு. என். கணேசசிங்கராஜா (புலோலி ப. நோ. கூ. சங்க கிளை மேற்பார்வையாளர்) வும், செயலாளராக திரு எஸ். ஆழ்வாப்பிள்ளை (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)யும், உப-செயலாளராக திரு. எம். வேலுப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) யும், பொருளாளராக திரு. எஸ். சோமாஸ்கந்தமூர்த்தி (அதிபர்) யும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 15 பேர் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## திணைக்கள இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

(வேலணை)

வேலணை பெருந் தெருக்கள் திணைக்களம் மூடப்பட்டு இதனது அலுவல்கள் யாவும் அராலி செட்டியார்மடம் என்னும் இடத்தில் நடைபெற்று வருகின்றது. அராலி போக்குவர்த்து பிரச்சினையை சாட்டாக வைத்து இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

போக்குவரத்துப் பிரச்சினைகள் தீருமட்டும் தற்காலிகமாகவே இதன் அலுவல்கள் யாவும் மேற்படி அராலி செட்டியார் மடப்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக திணைக்கள அலுவலர்கள் தெரிவிக்கின்றுர்கள். இந்த திணைக்களம் மாற்றப்பட்டது சம்பந்தமாக வேலணை பிரஜைகள் குழுத் தலைவர் திரு சி. இராசரத்தினம் ஜே. பி. கண்டனம் தெரிவித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு முறையீடொன்று செய்துள்ளார்.

## யாழ். மாவட்ட பாடசாலை பண்ணிசை போட்டி முடிவு

(வயாவிளான்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 1986-1ம் ஆண்டுக்கான பண்ணிசைப் போட்டியில் கோப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளின் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பாலர்பிரிவு ஆண்: (தனி நிகழ்ச்சி) 1ம் இடம் ச. றமேஷ், அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை (2ம், 3ம் இடங்கள் வழங்கப்படவில்லை) பாலர்பிரிவு பெண்: (தனி நிகழ்ச்சி) 1ம், 2ம், 3ம் இடங்கள் முறையே, 1. ந. தர்சினி, கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை, 2. க. திருவோதினி, சிறுப்பிட்டி அ. த. க பாடசாலை, 3. கலாதர், சினி குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை. ஆரம்பபிரிவு ஆண்: (தனி நிகழ்ச்சி) 1ம் இடம் ப. றமேஷன், உரும்பராய் சந்திரோதய வித். (2ம், 3ம் இடங்கள் வழங்கப்படவில்லை). ஆரம்பபிரிவு பெண்: (தனி நிகழ்ச்சி) 1ம், 2ம், 3ம் இடங்கள் முறையே 1. த. ஜெஞேதினி, உரும்பராய் சைவத் தமிழ் வித், 2. வி. திவ்வியா, கோப்பாய் சரவணபவானந்த வித்தி. 3. ரே. நே. துஷிந்தினி, உரும்பராய் சந்திரோதய வித். ஆரம்பபிரிவு (குழு நிகழ்ச்சி) 1. உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை, 2. உருமபராய் சைவத்தமிழ் வித்தியாசாலை, 3. நீர்வேலி அததியாயர் இந்துக்கல்லூரி. கீழ்ப்பிரிவு ஆண: (தனி நிகழ்ச்சி) 1. பா. ஸ்ரீ பாலமயூரன், கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை, (2ம், 3ம் இடங்கள் வழங்கப்படவில்லை). கீழ்ப்பிரிவு பெண்: (தனி நிகழ்ச்சி) 1ம், 2ம், 3ம் இடங்கள் முறையே 1. கா. குமுதினி, நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை 2. து. துசிலா, உரும்பராய் சைவத்தமிழ் வித், 3. இ. மகிழினி, இடைக்காடு ம. வித்தியாலயம் கீழ்ப்பிரிவு ஆண்கள்: (குழு நிகழ்ச்சி) 1ம் இடம்: கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை, (2ம், 3ம் இடங்கள் வழங்கப்படவில்லை). கீழ்ப்பிரிவு பெண்கள்: (குழு நிகழ்ச்சி) 1ம் இடம்: நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை, 2ம் இடம் கோப்பாய் சரவணபவானந்த வித். 3ம் இடம் தோப்பு அருள்நந்தி விததியாலயம். மத்தியபிரிவு ஆண: (தனி நிகழ்ச்சி):-1ம், 2ம், 3ம் இடம் முறையே 1. ஏ. அனுசாந்தன், அச்செழு சைவப்பிரகாச வித். 2. சு. சுரேசன், நீர்வேலி சி. சி. த க. பாடசாலை. 3. த. மதனரூபன், பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்.

மத்தியபிரிவு பெண்: (தனி நிகழ்ச்சி): 1ம், 2ம், 3ம் இடங்கள் முறையே 1. ஆ. தயாளினி, தோப்பு அருள்நந்தி வித். 2. வீ ஜெயநந்திதா, இடைக்காடு, ம. வித். 3. ச. கௌரி, வயாவிளான் ம. ம. வித் மத்தியபிரிவு பெண்: (குழுநிகழ்ச்சி)- 1 வயாவிளான் ம. ம. வி., 2. கோப்பாய் நாவலர் இந்து த. க. பாட, 3. நீர்வேலி ரே. க. பாட. மேற்பிரிவு ஆண்: (தனி நிகழ்ச்சி) 1. சி. பபீசன், அச்சுவேலி ம. வி. 2ம், 3ம் (இடங்களுக்கு பங்குபற்றவில்லை. (மேற்பிரிவு பெண் (தனி நிகழ்ச்சி):- 1. கி. வாசுகி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி. 2. பா சக்தியா, கோப்பாய் ம. வித்தியாலயம். 3. கா. பிரேமரஞ்சினி, ஆவரங்கால் நடராச வித். மேற்பிரிவு பெண்கள்: (குழு நிகழ்ச்சி):- 1. இடைக்காடு. ம. வித். 2. அச்சுவேலி ம. வித. 3. கோப்பாய் ம. வித். அதிமேற்பிரிவு:-பெண்கள் (தனி நிகழ்ச்சி):-1. க. மீனலோஜினி, நீர்வேலி அத்தியாயர் இந்து. 2 ந. சுசீலாதேவி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா 3. ஆர். குகானந்தநாயகி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

## விழிப்புக் குழு

(வேலணை)

மண்டைதீவு கிராம மக்களின் நன்மை கருதியும், அவர்களுக்கான பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்வதற்காகவும், மண்டைதீவு மக்களுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்காகவும், அவர்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கு முகமாகவும் மண்டைதீவு விழிப்புக் குழு என்ற பெயரில் ஓர் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு மக்களின் நன்மை கருதி பெருந்திரளான பொது மக்கள் கோரிக்கை விட்டதிற்கிணங்க இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விழிப்புக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் மண்டைதீவு சிறுப்புலம் கந்தசுவாமி கோவில் மைதானத்தில் நடைபெற்றபோது பின் வருவோர் நிர்வாக உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு கே. சிவகுலசிங்கம் (விசேட சேவை அலுவல்) செயலாளர்: திரு. செ. அ. தேவராசா (மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர்) பொருளாளர்: திரு. இ. தில்லைநாதன் (தலைவர் மண்டைதீவு மதிஒளி சனசமூக நிலையம்) பதினேழு பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்திற்கு பெருந்தொகையான மக்கள் திரண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்வியமைச்சு அறிவிப்பு

[அச்சுவேலி]

அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றும் வசதிகள் சேவைக்கட்டண, பாடசாலை அபிவிருத்திச்சங்க, தொண்டர் ஆசிரியர் விபரங்களை கல்வி அமைச்சு திரட்டி வருகிறது.

பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலையில் கடமைபுரியும் வசதிகள் சேவை கட்டண, பாடசாலை அபிவிருத்திச்சங்க, தொண்டர் ஆசிரியர் விபரங்களை உடனடியாக வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க தகுதி உள்ளவர்கள் அமய ஆசிரியர்களாக நியமிக்கப்படலாம் என்ற செய்தியை அடுத்து கல்வி கற்று விட்டு வேலையின்றி இருக்கும் பலரும் ஏதாவது ஒரு பாடசாலையில் எப்படியும் ஆசிரியராக சேர வேண்டும் என பாடசாலை அதிபர்களின் தயவை நாடத் தொடங்கி உள்ளனர்.

**GREENFIELD TRAVEL OPERATORS**
**கிறீன்பீல்ட் ரவல் ஒப்பரேட்டர்ஸ்**
**யாழ்நகர மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

தங்கள் வெளிநாட்டிலுள்ளவர்கள் உங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமா, அல்லது நீங்கள் அவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? அப்படியானுல் நீங்கள் எங்கள்கொழும்பு தொலைபேசி(Telephone) நம்பர்:573594 ஊடாக தொடர்பு கொள்ளலாம். இதற்கு வசதியாக எமது ஸ்தாபனம் இலங்கை நேரப்படி காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6 00 மணி வரை தங்களுக்கு விசேட சலுகைக் கட்டணத்தில் சேவையாற்றுகிறது.

இதேபோல் எங்கள்கொழும்பு ரெலெக்ஸ் (Telex) நம்பர்:22287 தொடர்புகள் ஏற்படுத்துவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு எம்முடன் நேரில் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். இத்துடன் உள்ளூர் தொலைபேசி தொடர்புகளுக்கும் எங்களை நாடுங்கள்.

உரிமையாளர்,
கிறீன்பீல்ட் ரவல் ஒப்பரேட்டர்ஸ்

இல 26, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23875, 22784.
Telex No: 22287

R/24651

## பிறந்தநாள் வாழ்த்து

⌘ ஆவரங்கால், அரசரத்தினம் மங்களவதி தம்பதியின் மகன் வயூரன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

⌘ கோண்டாவில் மேற்கு, குகேந்திரன் குலமணிதேவி தம்பதியின் மகன் மணிவண்ணன் இன்று தனது மூன்றுவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

⌘ கிளிநொச்சி, செல்வம் பிரியா தம்பதியின் மகன் ஜெரின் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

⌘ தொண்டமாஞறு, மகாதேவன் கருணுனந்தேதேவி தம்பதியின் மகள் உமாதர்ஷினி இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

**சவூதி அரேபியா, அபுதாபி பிரயாண ஒழுங்குகள்**

சவூதி அரேபியாவில் JUBAIL துறைமுகத்தில் (LABOURER) தொழிலாளர் தரத்தில் வேலை செய்ய விரும்புபவர்களுக்கு இம்மாதம் 23ந், 27ந் திகதிகளில் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். (வயது எல்லை 25—40)

அபுதாபிக்கு Cleaners (கிளீனர்ஸ்) வேலையாக செல்ல விரும்புபவர்களுக்கு 4 கிழமைகளுக்குள் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். (வயது எலலை 21—30)

சகலரும் பாஸ்போர்ட், 6 படங்களுடன் நேரில் வரவும்.

முகவரி:-

**K.M. வைத்தீஸ்வரன்,**
கச்சாய் வீதி, கொடிகாமம்.

R/24655

**LEARN WORD PROCESSING**
முதல் முறையாக யாழ்நகரில்
**The DATACENTER**
அறிமுகப் படுத்தும் புதிய பயிற்சி நெறி
ஆரம்பம்:- 17-08-86 (ஞாயிறு)
நேரம்:- பிற்பகல் 2.30

விபரங்கட்கு:
**The DATACENTER**
77, Main Street, Jaffna. (R/24652)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி நிர்மலா நடேசன்**
(Formerly of National Development Bank of SriLanka)

மலர்வு: 30-06-51 உதிர்வு: 21-07-85

ஆண்டொன்று சென்றுலும் ஆழ நினைந்துன்னை
மாண்டிங்கு வாடுகின்ரேம் மாமணியே நீ நினைந்து
மீண்டிங்கு வந்து மீளாத் துயர் அடையும்
மாண்ட எம் உள்ளத்தை மகிழ்விக்க மாட்டாயா?

நீ இல்லா வாழ்வின்
துயர் நினைந்து உருகும்
அன்புக் கணவர்,
பெற்றுர், சகோதரர்,
உறவினர், நண்பர்.

'காவேரி'
புங்குடுதீவு-12

R/24650

ஈழமுரசு

9-8-86



பிரஜைகள் குழு அனுப்பியது

# கிளிநொச்சி சம்பவம்பற்றி பி.பி.ஸி-க்கு விரிவு அறிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரஜைகள் குழு பி.பி.சி. ஒலிபரப்புஸ்தாபனத்திற்குக் கிளிநொச்சிச் சம்பவங்கள் குறித்து விரிவான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. சில தினங்களுக்கு முன் பி.பி.சி. ஒலிபரப்பில் கிளிநொச்சி பற்றிய செய்தி ஒலிபரப்பப்பட்டபோது அதில் போதிய அளவு விபரங்கள் சொல்லப்படவில்லை.

இதேசமயம் சுமார் ஒன்பதிணுயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கிளிநொச்சிக் கிராமங்களிலிருந்து பாதுகாப்புக் கருதியும் பாதிப்புற்றும் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்குமாறும், இராணுவ முகாமை அல்லது அதனைச் சுற்றியுள்ள அரச திணைக்களங்களை வேறு இடங்களுக்கு மாற்றுமாறும் ஜனாதிபதிக்கு பிரஜைகள் குழுவால் மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பலாலி, கோட்டை, வவுனியா, பூசா போன்ற முகாம்களிலுள்ள கிளிநொச்சி மாவட்ட இளைஞர்கள் பற்றிய விபரங்களும் பிரஜைகள் குழுவால் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் தொடர்பு கொண்டு கோரப்பட்டுள்ளது.

# அகதிகள் புனர் வாழ்வுக் கழகம்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் ஒன்று வேலணைப் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. சி. இராசரத்தினம், ஜே.பி. தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. டி. விக்டர் செல்வம் (வேலணை), உப தலைவர்கள்: தி. க. திருவிளங்கம் (புங்குடுதீவு மத்தி), திரு. செ. நடேசபிள்ளை (அல்லைப்பிட்டி), செயலாளர்: திரு. த. தவராசா (ஆசிரியர், புங்குடுதீவு), உப செயலாளர்: திரு. பா. தேவநாதன் (சரவணை), பொருளாளர்: திரு. எஸ். ஐ. தனபாலசிங்கம் (றிக்கோ - வேலணை) ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களாக: திரு. த. சி. செல்வரத்தினம் (புங்குடுதீவு மேற்கு), திரு. ம. அம்பிகைபாகன் (நயினாதீவு தெற்கு), திரு. எஸ். என். துரைராசா (நயினாதீவு வடக்கு), திரு. நா. இராசலிங்கம் (மண்டைதீவு), திரு சி. இராசரத்தினம் (தலைவர், வேலணை பிரஜைகள் குழு) என்பவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# அளவெட்டி பகுதி: மின்தடை ஏற்படக்கூடிய அபாய நிலை!

(அளவெட்டி)

அளவெட்டிப் பகுதியிலுள்ள ட்ரான்ஸ்போமர்கள் தினசரி ஒவ்வொன்றுகப் பழுதடைந்து வருகின்றன. இதனுல் இப்பகுதிகளில் முற்றுக மின்தடை நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது.

களவாக மின் இணைப்பை ஏற்படுத்தி வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாகவே மேற்படி ட்ரான்ஸ்போமர்கள் பழுதடைகின்றன.

இங்குள்ள ஐந்து ட்ரான்ஸ்போமர்களும் ஒன்றுமாறி ஒன்ருக செயலிழந்து வருவதனுல் மின்சாரசபை ஊழியர்கள் மிகுந்த சிரமம் அடையும் அதேவேளை இப் பகுதிகளிலுள்ள பல அரச நிறுவனங்கள், தொழிலகங்களும் மின்சார வசதியின்றி இருட்டில் இயங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் நீடித்து வருகின்றது.

வீடுகளுக்குச் சொந்தமாக மின் இணைப்பை ஏற்படுத்தியுள்ள, வீட்டு சொந்தக்காரர் பலரும், மின்கம்பத்தில் வயரைக் கொழுவி எடுத்து பாவித்து வருவதை நேரடியாக காணக் கூடியதாயுள்ளது.

இதைப்போலவே சில தனியார் தொழிற்சாலைகளும் ஒளி மின்சாரத்தில் காலத்தை ஓட்டி வருகின்றன.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இங்குள்ள ட்ரான்ஸ்போமர் ஒன்று அதிக பாரத்தை தாங்கமுடியாமல் மூன்று தடவைகள் வெடித்துச் சிதறியது குறிப்பிடத்தக்கது.

# ஏழாலையில் உரக் களஞ்சிய அமைப்பு வேலை ஆரம்பம்

(சுன்னுகம்)

விவசாயத் திணைக்களத்தினுல் ஏழாலைப்பகுதியில் அமைக்கப்படும் உரக்களஞ்சிய விற்பனை நிலையக் கட்டிடத்திற்கான அடிக்கல் சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. குமாரவேலுவினுல் அண்மையில் நாட்டி வைக்கப்பட்டது.

தொண்ணூற்றேழாயிரம் ரூபா மதிப்பீட்டில் இக்களஞ்சியம் கட்டப்பட விருக்கிறது.

இவ்வைபவத்தில் உரையாற்றிய திரு சி. குமாரவேல் ஏழாலை பகுதி முற்றிலும் விவசாயிகளாலான கிராமமாகும் - இது வரைகாலமும் உரவகைகளுக்காக அவர்கள் பட்ட துன்பங்கள் இக்கட்டிட நிர்மாணிப்பு நடவடிக்கை மூலம் நீக்கிவைக்கப்படவிருக்கிறது. இதன் மூலம் ஒரு பகுதி பணத்தை அவர்கள் சேமித்துக் கொள்ளவும் வாய்ப்பேற்படும்' என்றுர்.

அரசியல் ஆற்றலில்லாத

# ஆட்சியாளர்களாலே தான் அனர்த்தங்கள் விளைவு

(கரவெட்டி)

"பெற்றேரே பிள்ளைகளைக் கொலை செய்வதைப்போல எமது நாட்டு அரசாங்கமே எமது நாட்டு தமிழ் மக்களை அழித்தொழிக்கும் ஒரு இழிவான சூழ் நிலையில் நாம் வாழ்ந்து வருகின்றேம். இவ்விழிவான நிலை போக்கப்பட வேண்டுமானுல் ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்கள் அரசியலை நன்கு கற்றுத்தேற வேண்டும். எமது நாட்டு ஆட்சியாளருக்கு எந்த நாட்டு அரசியல் வரலாறும் தெரியாததனுல்தான் எமது பிரச்சினைகளை தீர்க்க முடியாது திண்டாடுகின்றனர். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஒரு இளைஞனுக இருந்தபோதே சிறந்த சித்தாந்த வாதியாகவும் சிந்தனை வாதியாகவும் செயற்பட்டார். என்பதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. 1926ம் ஆண்டு இத்தகைய பெருந்தகையால் முன் வைக்கப்பட்ட சமஷ்டி அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று எமது நாட்டில் இனவாதம் வளர்ந்திருக்கமாட்டாது. இன்னல்கள் நிறைந்திருக்க மாட்டாது"

இவ்வாறு சட்டத்தரணி திரு. வீ. மகாலிங்கம் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் வதிரி தமிழ் மன்ற இளைஞர் கழகமும், அறவழிப் போராட்டக் குழுவும் நடாத்திய கருத்தரங்கில் பேசுகையில் கூறினுர்.

மேற்படி கருத்தரங்கு நிகழ்ச்சிக்கு வதிரி தமிழ் மன்ற இளைஞர் கழகத் தலைவி செல்வி எ. சூரியகலா தலைமை வகித்தார்.

திரு. மகாலிங்கம் தொடர்ந்து பேசுகையில் "இனிவரும் கால கட்டத்திலாவது அரசியலில் புகும் இளைஞர்கள் ஓர் சித்தாந்தக் கொள்கை பொது வேலைத் திட்டம் என்பவற்றை வரையறுத்து மக்களோடு மக்களாகச் சேர்ந்து மக்களுக்காகவே தம்மை அர்ப்பணித்தல் வேண்டும். இதே சமயம் தனிநபர் கொலைகள் மூலம் ஒரு வர்க்கமோ. அடக்குமுறையோ அழிந்து போகாதென்பதையும் மனதிற் கொண்டிருத்தல் வேண்டும்" என்றுர்.

மேற்படி கருத்தரங்கில் யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, சட்டத்தரணி திரு. எம். சே. முத்துக்குமாரு, உதவிப் பணிப்பாளர் திரு. எம். நாகேந்திரம், நிஸ்கோ முகாமையாளர் செல்வி எஸ். மகேஸ்வரி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். ஈற்றில் செல்வி சிலம்புச் செல்வி நன்றி நவின்றுர்.

# வடமராட்சி பிரஜைகள் குழு ஒன்றியம் அங்குரார்ப்பணம்

(புலோலி)

பிரஜைகள் குழு ஒன்றியத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நெல்லியடி கல்வி வளர்ச்சிக் கழக மண்டபத்தில் நெல்லியடி பிரஜைகள் குழுத் தலைவர் சட்டத்தரணி வ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தலைமை உரையைத் தொடர்ந்து பிரஜைகள் குழு ஒன்றியக் கூட்டத்தில் கலந்து கொண்ட பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளின் பிரஜைகள் அங்கத்தவர்களும் ஒன்றிய நலன் விரும்பிகளும் உரை நிகழ்த்தினுர்கள்.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் மக்களுக்கு எழுகின்ற பிரச்சினைகளை பகுதி பகுதியாகமட்டும் சிந்திக்காமல் ஒன்றிணைந்த ரீதியில் சிந்திக்க வேண்டுமெனவும், ஒன்றிணைந்த பிரஜைகள் குழுவுடன் ஏனைய பிரஜைகள் குழுக்களும் ஒன்றிணைக்கப்படவேண்டும் என அழைப்பும் விடுக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பல்வேறு வகையான குறைபாடுகள் காணப்படுவதனுல் அக்குறைபாடுகளை நீக்குமுகமாக அப்பகுதியின் கல்வி சுகாதார போக்கு வரத்து அபிவிருத்தி நடவடிக்கைகளில் அதிக கவனமெடுப்பதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஒன்றியத்தின் உறுப்பினர்களாக பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம், திரு. எஸ். கதிரேசு, திரு. வி. சித்திரவடிவேல் திரு. கே. கிருஷ்ணசாமி, திரு. ஜே. ஜி. இராசேந்திரம், திரு. ஜே. எவ். பிரபாகரன், திரு. எஸ். ஸ்ரனிஸ்லாஸ், திரு வி. சிவலிங்கம் ஆகியோரும் செயலாளராக திரு. கே. சிவபாதமும் (ஆசிரியர்) தெரிவுசெய்யப்பட்டனர்.

நிரபராதி தண்டனை பெறுவது

# கொடியோர் ஆட்சியில் ஏற்படும் நிகழ்வேயாகும்

(சுன்னுகம்)

"எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் சட்ட ஆட்சி பூரணத்துவமாக நடைமுறைப்படுத்தப்படுகிறதென்றுல் அங்கே நிரபராதிகள் தண்டனை அனுபவிக்கக் கூடாது. இதனையே அரசியல் சட்ட அறிஞர் 'டைசி', 'பல குற்றவாளிகள் தப்பித்துச்செல்லலாம்; ஆனுல் எந்த ஒரு நிரபராதியும் தண்டனை அனுபவிக்கக் கூடாது' எனச் சட்ட ஆட்சிக்கு வரைவிலக்கணம் கூறினுர் ஆனுல், ஸ்ரீலங்கா நவபாஸிச அரசினைப் பொறுத்த வரையில் சட்ட ஆட்சி இல்லை என்றே கூறக் கூடியதாயுள்ளது."

இவ்வாறு தெல்லிப்பளை சுகாதாரத் தொழிலாளர் சங்கக் கூட்டம் திரு. செ. யோகர் தலைமையில் நடைபெற்றபோது உரையாற்றிய திரு ம. பொ. சி. பாலசந்திரன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 1983 யூலைக் கலவரத்தின் போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச்சட்டமூலம் கைதுசெய்யப்பட்ட பல தமிழ் சந்தேக நபர்களை, குற்றவாளிகளென நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட சிங்களக் கைதிகள், காடையர்கள் மூலம் படுகொலை செய்யப்பட்டனர். இதன்மூலம் சிறீலங்கா அரசு தன் நாட்டில் சட்ட ஆட்சி இல்லையென்று சர்வதேசவரங்கில் தன்னை இனங்காட்டிக் கொண்டுள்ளது.

சில வருடங்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யபபட்டு நாட்டின் இராணுவ முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் சொல்லொண்ணுச் சித்திரவதைத் துன்பத்தை அனுபவித்து வருகிருர்கள். இவர்களில் அனேகர் பாட்டாளி வர்க்கத்தினரும், பள்ளி மாணவர்களும், குடும்பத் தலைவர்களுமடங்கிய அப்பாவிப் பொதுமக்களே. பல வருடங்களாக வழக்குத் தாக்கல் செய்யப்படாத நிரபராதிகள் பலரும் இதற்குள் அடங்குவர். எனவே, இனியுங் காலந் தாழ்த்தாது அரசு இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்து நிரபராதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

தலைவர் திரு. செ. யோகர் தனது தலைமையுரையில் கூறியதாவது: "அரசாங்கம் இராணுவநடவடிக்கைமூலம் முழுத் தமிழரையும் வருத்திவருகின்றது. இன்றிருப்போர் நாளை உயிருடனிருப்பார் என எண்ணும் நிலை இப்போதில்லை. முகாமையண்டியுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு எதுவும் எந்நேரமும் நடக்கலாம்—நிம்மதியற்ற சூழலில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். இந்நேரத்தில் எல்லாரும் ஒன்றிணைந்து இன்பதுன்பங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். எமது கோரிக்கைகளைத் தொழிற்சங்கத்தினூடாக ஐக்கியப்பட்டுச் செயற்படுவதன் மூலமே பெற்றுக் கொள்ள முடியும்" என்றுர்.

சாவகச்சேரி சந்தையில்

# தனியான குழாய்க் கிணறு அமைக்க ஏற்பாடு

(சாவகச்சேரி)

"சாவகச்சேரி நகராண்மைக் கழகத்தின் கீழ் இயங்கும் பொதுச் சந்தையைப் பொறுத்தளவில் அங்குள்ள வர்த்தகர்கள் குடி தண்ணீர் பெறுவதில் பாரிய கஷ்டமடைகிருர்கள். இக்கஷ்டத்தை நீக்குவதற்காக நகராண்மைக் கழகம் ஒரு தனி குழாய்க் கிணற்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது."

இவ்வாறு சாவகச்சேரி நகராண்மைக் கழக செயலதிபர் திரு. ரீ. நவரத்தினராஜா நமது நிருபரிடம் கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: சாவகச்சேரியில் பொது குடி தண்ணீர் விநியோகத் திட்டம் ஒன்று அமுல் செய்யப்படுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன. எனவே இக் குடிநீர்த் திட்டம் பொதுச் சந்தைக்கும் பயன்படும் என்ற நம்பிக்கையில், சந்தைக்கு நீர் வழங்கும் திட்டத்தில் முன்பு பூரண நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திட்டத்தை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. ஆகவேதான் இதற்கான ஓர் தனிக் குழாய்க் கிணற்றை சந்தைக்கு அருகாமையில் அமைக்கவுள்ளோம்.




B/1449

உ

முருகா

நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

மஹோற்சவம் - 1986

நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றம்

தேனை எடுத்துத் தினைமா வுடன்கலந்த
மானை மருவி மணந்தவனை - ஞானங்
கொழிக்கின்ற நல்லைநகர்க் கோயிலிலே கண்டால்
விழிக்குக் கிடைக்கும் விருந்து!

– சோ. ப.

எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோப்'

### உதய சிந்தனை

நீண்ட வழியில் சென்ருல் வியர்வை வெளிவரும்; குறுக்கு வழியில் சென்ருல் இரத்தம் வெளிவரும்.

—அமெரிக்க பழமொழி.

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி; 22437

## இதய ஒலி

9 8-86 சனிக்கிழமை (அக்ஷய) ஆடி 24

# திட்டமிட்டு நடைபெறும் மிகப்பெரிய மோசடி

காலம் நேரமறிந்து தமிழ் இளைஞர்களை ஏமாற்றிப் பிழைக்கும் கும்பலொன்று, இப்பொழுது மிகவும் வேகமாகச் செயற்படுவது பற்றிய பல செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இதனுல் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி, பல குடும்பஸ்தர்களும்கூட தமது பணம், சொத்து ஆகியவைகளை இழந்து வெளிநாடுகளில் நடுத்தெருவில் அலையும் நிலைமை உருவாகியுள்ளமை பற்றிய பல தகவல்கள் தினசரி வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மத்திய கிழக்கில் வேலை வாய்ப்பு என்று அழைத்துச் செல்லப்பட்டவர்கள் பம்பாயிலும், பாகிஸ்தானிலும் அலையவிடப்படுவது இன்று நேற்றல்ல, பல வருடங்களாகவே நடைபெற்று வருகின்றது.

தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடின்றி, ஆண்கள், பெண்கள் என்ற இரு பாலாருமே இந்தமோசடிக்குள் அகப்பட்டு மாதக்கணக்கில் வெளிநாட்டு வீதிகளில் அலைந்து திரிந்து பிச்சையெடுத்து வாழ்க்கை நடத்தி பின்னர் நாடு திரும்பியுள்ளனர்.

இது வேறு கதை.

ஆனுல், தமிழ் இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறும் புதிய புதிய கோஷ்டிகள், அவர்களை ஏமாற்றி ஏப்பம் விடும் சம்பவங்கள் தனியான கதையாகும்.

பத்திரிகைகளில் வெளிவரும் கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி மோசம் போனவர்கள், கள்ளப் பாஸ்போர்ட்டுகள், மோசடி செய்யப்பட்ட விஸாக்களை நம்பி ஏமாற்றப்பட்டவர்கள் பற்றிய செய்திகளே இப்போது அதிகம்.

தங்கள் சொந்த மண்ணில் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழ முடியாதுள்ளதால் வெளிநாடு செல்ல விரும்புபவர்களை மிகச் சுலபமாக ஏமாற்றவென்றே புதுப்புதுக் கோஷ்டிகள் "வெளிநாட்டு ஏஜன்ஸி"கள் என்ற பெயரில் உருவாகி வருகின்றன.

ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடா, அவுஸ்திரேலியாபோன்ற அடைக்கலம் வழங்கும் நாடுகளுக்கும் அழைத்துச் செல்வதாகக் கூறியே தமிழர்கள் பெருமளவில் ஏமாற்றப்படுகின்றுர்கள்.

அரைலட்சம், முக்கால் லட்சம் என்று ரூபா நோட்டுக்களை எண்ணிக்கொடுத்த பலர் நடுவழியில் பரிதவிக்க விடப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஒரு கோஷ்டி முழுமையாகத் திருப்பி அனுப்பப்பட்டு, எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்து, சகலதையும் இழந்து வந்ததை கடந்த வாரம் அறியத்தந்தோம்.

டென்மார்க்குக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களுக்கு நேர்ந்த கதியை கடந்த மாதம் பத்திரிகைகளில் படித்தோம்.

ஈராக்கிற்குச் சென்றவர்களின் கதையை நேற்றுமுன்தினம் படிக்க நேர்ந்தது.

பத்திரிகைகளில் வந்தவைகளைத்தான் எம்மால் படிக்கமுடிகின்றது. பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் ஏமாற்றப்பட்ட கதைகள் பத்திரிகைகளில் வெளிவராமலே போயுள்ளன.

ஆனையிறவு, வவுனியா, மதவாச்சி, கொழும்பு, கட்டுநாயக்கா என்று எத்தனையோ உள்நாட்டுத்தடை முகாம்களைத் தாண்டிச் செல்பவர்கள், திட்டமிட்ட கோஷ்டிகளினுல் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

இதற்கு சில உள்ளூர் நிறுவனங்களும், தனிநபர் ஏஜன்ஸி என்று கூறப்படுபவர்களும் உடந்தையாக இருப்பதுவே எமக்கு வேதனையைத் தருகின்றது.

சிவில் நிர்வாகம் சீரழிந்து போனதால், காலத்தையும், நேரத்தையும் சாதகமாக்கப் பார்ப்பவர்களால் திட்டமிட்டு இந்த மோசடி மேற்கொள்ளப்படுகின்றதா?

பொறுப்பு வாய்ந்த அமைப்புக்கள் இவ்விடயமாகவும் கொஞ்சம் கவனமெடுப்பது நல்லது!

அமைச்சர் அத்துலத்முதலி 'த ஐலன்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் தமிழாக்கம்

# உள்நாட்டு நெருக்குதல்களை தீர்த்துவிடலாம்; வெளிநாட்டு நெருக்குதல்கள் எமக்கு...

**3-ம் பகுதி**

வினு: பாதுகாப்புத்தான் இன்று எமக்குள்ள முதற் பிரச்சினை என்பதையே தமிழர்கள் கூறிவந்துள்ளார்கள். இலங்கைத் தேசத்தின் தலைநகரம் கொழும்பு. அதன் கேந்திர வலயமாக விளங்கும் கொழும்பு கோட்டைக்கு மிக அண்மையில் அமைந்த கொம்பனித்தெருவில் சில சம்பவங்கள் அண்மையில்நேர்ந்தன. அவற்றைத்தான் அவ்வளவாகப் பெரிதுபடுத்தாது விட்டாலும், உயர்நீதிமன்றம் நல்லநாயகம் வழக்கில் வழங்கிய அண்மைத் தீர்ப்பையாவது எடுத்துக் கொள்வோம். அப்பொழுது இப்பாதுகாப்புக் கோரிக்கை நியாயப்படுத்தப்படக்கூடியதுதான் எனத்தோன்றும்.

விடை: அந்த அடிப்படையில், பாதுகாப்புஎன்பது தமது பிரச்சினையுங்கூட என்று சிங்களவர்கள் கூறுவார்களே! கொழும்பில் குண்டு வெடிப்புகள், இபபடி, அப்படி என்றெல்லாம்.

வினு: நிச்சயமாக, ஆனுலும்,...

விடை: பயங்கரவாத இயக்கங்கள் வன்முறையில் இறங்கியமையால் விளைந்த பொதுவான பிரச்சினையின் ஒரு பகுதியே அது.

வினு: பயங்கரவாதத்திற்கு முன்பு, இராணுவம் யாழ்ப்பாணம் செலலவில்லையா? 1961- இல் ...

விடை; ஆம், சத்தியாக்கிரகம். ஆனுல் அந்நாட்களில் எல்லாம் இப்பிரச்சினைகள் அவ்வளவு பாரதூரமானவையாக இருக்கவில்லை. தனிவேறுன ஓர் அரசுக் கோரிக்கை பிரகடனமானதை அடுத்தும், வன்முறையில் இறங்கிய பிறகும் அவை பாரதூரமானவை ஆயின.

'சிவில்' கீழ்ப்படியாமையை அடக்க இராணுவம் பயன்படுத்தப்படும்போது, தவிர்க்க ஒண்ணுத ஏதோ இரண்டொரு அசம்பாவிதம் சம்பவித்தே தீரும். ஆனுல், 1983, ஜூலை கலவரங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அந்தப் பதின்மூன்று இராணுவத்தினரை மறைந்திருந்து தாக்கியமையின் விளைவானவையே அக்கலவரங்கள். வன்செயல்கள் ஒரு தடவை தொடங்குமானுல், அவை தன்பாட்டில் தொடர்ந்துகொண்டேயிருக்கும்.

எல்லாச் சமுதாயங்களையும் சேர்ந்தவர்கள் தமதுபாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்ளும் வழி, இப்படியான ஓர் உடன்பாட்டுக்குவருவதுதான். இன்ன இன்ன எண்ணிக்கையினரான குடிமக்கள் அ, ஆ, இ. என்ற இடங்களில் கொல்லப்பட்டார்கள் என்று நீங்கள் சொல்லலாம். ஒவ்வொரு சம்பவமும் கவலைக்கு உரியதே. ஆயினும், பரஸ்பரம் குற்றம் சுமத்துவது பரிகாரம் ஆகும் என்று நான் நினைக்கவில்லை.

வினு: எமது படைகளின் நிலைமையையிட்டு ஏதாவது விமர்சன வார்த்தைகள் உங்களிடம் இருக்குமா? உதாரணமாக, கொழும்பு கொம்பனித் தெருச் சம்பவங்களுக்கு நேரடுத்து முன்னதாக, ஆத்திரமூட்டும் செயல் எதுவும் அறவே இடம்பெறவில்லை.

விடை: ஆத்திரமூட்டும் நடவடிக்கை ஏதுமில்லை என நீங்கள் கூறலாமோ என்பதை நான் அறியேன். அவர்களுடைய சொந்த உணர்வுகளை அவர்கள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. எமது இராணுவம் தொடர்பான பிரச்சினை ஒன்று எமக்கு ஏற்பட்டிருந்தது. வைபவ ரீதியான சந்தர்ப்பங்களில் எவ்வாறு இராணுவத்தினர் நடந்துகொள்ள வேண்டும் என அவர்களுக்குப் பெரும்பாலும் பயிற்றப்பட்டு இருந்தது. ஒரு போரைக்கூட அவர்களாற் கையாண்டிருக்க முடியும். ஆனுல் அவர்கள் ஈடுகொடுக்க வேண்டி இருந்தது ஒரு பயங்கரவாதக் கிளர்ச்சிக்கு.

கிளர்ச்சி ஆரம்பமானபோது அவர்களுக்கு அதுபற்றிய அனுபவம் எதுவும் அறவே இருக்கவில்லை என்பது திண்ணம். ஆனுலும் அந்தப்போரில் ஈடுபடலானதும, அவர்கள் முன்னரைவிடத் திறமையுடனும், பொறுப்பு உணர்வுடனும் நடந்துகொள்கின்றனர். அவர்களுடைய உயிருக்கு ஆபத்து நேரக்கூடிய நிலைமைகளுள் அவர்கள் உட்பட்டுக்கொண்டதும், நெருக்கடிக்கு உள்ளான ஆட்களைப்போலவே அவர்கள் நடந்துகொள்கின்றுர்கள்.

சாதாரண மனிதர், குறிப்பாக ஆங்கிலம் பேசும் நடுத்தர வகுப்பினரோ, இலங்கை இராணுவத்தினர் பற்றிப் போதிய அறிவோ அவர்கள்பால் பரிந்துணர்வோ உடையவர்களாக எப்பொழுதும் இருப்பதில்லை என இராணுவத்தினர் உணர்ந்து கொள்கிறுர்கள். அதாவது, இலங்கை நாடு ஒரு பயங்கரவாதத் தாக்குதலின் அச்சுறுத்தலை எதிர் நோக்கி நிற்கும் இவ்வேளை, அதுவும் முழு நாட்டையும் கைப்பற்ற அத்தகைய மிரட்டலில் அவர்கள் ஈடுபட்டு இருக்கும்வேளை, இராணுவத்திலர்தான் நாடு சின்னு பின்னம் அடையாது ஒரே கண்டமாக அதனைப் பாதுகாத்து வருபவர்கள் என்பதை இவ்வகுப்பினர் நயந்து கொள்வதில்லை.

இராணுவத்தினரின் பார்வைக் கோணத்தைக் குடிசனங்களுக்கும், குடிசனங்களின் பார்வைக் கோணத்தை இராணுவத்தினருக்கும் புரிய வைப்பது எனது பணியாகிவிட்டது. அப்பணி புரிவதல் நான் ஓரளவு 'வேண்டாத ஆளாக' நேர்ந்துள்ளது. ஆயினும் அதைப்பற்றிப் பரவாயில்லை.

வினு: படை குலைப்புத் திட்டங்கள் ஏதும் உங்களிடம் உண்டா? ஒரு புறம் பூரண பாதுகாப்பு பற்றி நீங்கள் கூறிவர, மறுபுறம் நிதியமைச்சர், இயன்ற விரைவில் பாதுகாப்புச் செலவின நிதியீட்டை நறுக்கிக் குறைக்க வாய்க்காதா என அததருணத்தை எதிர்நோக்கி நிற்பவராகத் தோன்றுகிறுர்.

விடை: இது விடயத்தில், நம்மிடையே ஒருவருக்கு ஒருவரிடம் முரண்பாடு அறவே கிடையாது. பூரணமான பாதுகாப்பு என்பது ஒரு கருத்தேற்பு. பாதுகாப்பு இல்லாமல் அபிவிருத்தி எமக்குக் கைகூடப் போவதில்லை என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டி இருக்கிறது. நாட்டின் இறைமைக்கு ஆபத்துகள் நேரலாம் எனுமபடியான நிலைமைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

வினு: தேசத்தின் உள்ளிருந்தா வெளியிலிருந்தா?

விடை: உள்ளே எழும் பிரச்சினைகளை எம்மால் தீர்த்துக் கொள்ள இயலும். அவற்றை ஜனநாயக முறையில் நாம் தீர்த்துக் கொள்ளவும் வேண்டியிருக்கிறது. அவை நாட்டின் அகப பிரச்சினைகள். புறப் பிரச்சினைகள் தாம் எனது மனதை அலைக்கழிக்கின்றன. வெளிநாட்டிலிருந்து வரும் நெருக்குதல்.

வினு: அதனை விரித்துக் கூறுவீர்களா?

விடை: கூற நான் விரும்பவில்லை. ஆனுல் ஒரு நிலைப்பாட்டை நாம் ஏற்றேயாக வேண்டியிருக்கிறது. பாதுகாப்பு உணர்வு எமக்கு இருத்தல் வேண்டும். அது இல்லையேல், அபிவிருத்தி வகையில் நாம் சாதித்து முடிப்பவற்றுக்குக் குந்தகம் (தீங்கு) விளைய இடமுண்டு. எமது சமுதாயத்தினர் எல்லோரையும் நாம் பாதுகாப்பு உணர்வு உடையோர் ஆக்கவேண்டி இருக்கிறது. அதற்கு அவர்கள் வசம் என்ன ஆயுதங்கள் பெற்றுக் கொடுப்பது என்பது வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டைப் பொறுத்த விடயமாகும்.

வினு: வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய படையெடுப்பு ஒன்றுக்கு எதிராக எமது நாட்டைப் பாதுகாக்க எம்மால் இயலும் என மனதார நீங்கள் நினைக்கிறீர்களா?

விடை: எம்மைவிடச் சிறிய நாடுகள், அப்படி நேரும் பட்சத்தில் ஒரு தடவை முயன்று பார்க்கவேண்டுமென எண்ணுகின்றன. சிங்கப்பூர், வேறு கிழக்கு ஆசிய நாடுகள் ஆகியன இவற்றுட் சில. அவை செலவிடும் அதேயளவு நிதியை நாம் செலவிடவேண்டும் எனக் கட்டாயம் கிடையாது. ஒரு வேளை திருகோணமலைத் துறைமுகம் முற்காலங்களில் இருந்த அளவு இராணுவ, வர்த்தக, பிரயாண வாய்ப்பு வசதிகள் கொண்டதாக இப்போது இல்லாவிட்டாலுங்கூட, எமது இலங்கை நாடு ஓரளவு கணிசமான இராணுவ, வர்த்தக, பயண வாய்ப்பு வசதிகள் வாய்ந்த பூகோள இடம் வகிக்கிறது.

வினு: இலங்கையின் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள் இத் தீவின் உள்ளிருந்து வருமானுல், அவை ஜனநாயக முறையில் தீர்த்துவைக்கப்படல் வேண்டும் என்றீர்களே. அவை இருவகைப்படும். ஒன்று 'ஜே வி பி.' (ஜாதிக்க விமுக்தி பெரமுன') போன்ற சக்திகள். மற்றவகையின, 'ஜே வி. பி.' யிலிருந்து பிரிந்துசென்று

—5-ம் பக்கம் பார்க்க

ஈழமுரசு



நினைவஞ்சலி

# 'ஆசிரிய மணியாக' திகழ்ந்த அமரர் க. ஆறுமுகம்

உலகில் சிலருக்குத் தொழில் கள் அமைந்து விடுகின்றன. அதனால் அத் தொழில்களுக்கே தனிமதிப்பு ஏற்படுகிறது அந் தத் தனிமதிப்பினல் அத் தொ ழில்களை மேற்கொண்டொழு கும் சமுதாயத்திற்கே தனிப் பெருமை சேருகிறது. இதற்கு உதாரண புருஷராகத் திகழ்ந் தவர். ''ஆசிரியமணி'' அமரர் திரு. கந்தையா ஆறுமுகம் அவர்கள். சுன்னுகம் கந்தரோ டையில் 16-10-1910ம் ஆண்டு பிறந்த 'ஆசிரியமணி' அமரத் துவம் அடைந்து 18 ஆண்டு களாகின்றன.

கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயத்தின் வளர் ச்சிக்கு அடிகோலி வைத்தவர் அன்னரே. அது சாதாரண வித்தியாலயமாக இருந்த பொழுது கொழும்பு வடக்கில் சைவர்களின் கண்கள் எனவே விளங்கத்தக்க நிலைமையை அவர் ஆக்கி வைத்தமை யாவ ராலும் போற்றப்பட்டது. அரசாங்கம் தலைமையாசிரிய ருக்குக் கொடுக்கும் சம்பளத் தைவிட வேறு உபகாரப்பணத் தொகையையும் சேவையின் மகிப்புக்குக் கொடுத்துதவக் கொழும்பு விவேகானந்தசபை முற்பட்டதென்றல் ஆசிரிய மணி க.ஆறுமுகம் அவர்களின் சேவை சொல்லும் தரம் அன்று.

அகில இலங்கைத் தமிழா சிரியர் சங்கம் உருவாகக்கார ணமாக இருந்தவர் அமரரே. மேல் மாகாணத் தமிழாசிரி யர் சங்கத் தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றியது டன் அகில இலங்கைத் தலைவ ராகவும் சேவையாற்றினர். அகில இலங்கைத் தமிழாசிரி யர் சங்கமே இவரது பண்பை யும், ஆற்றலையும் மதித்து 'ஆசி ரியமணி' என்னும் பட்டம் அளித்துக் கௌரவித்தது இவர் செய்த சேவையின் பய னுக இன்று அகில இலங் கைத் தமிழாசிரியர் சங்கம் தொழிற் சங்கமாகப் பதியப்பட்டுப் பலவருடங்களா கத் தமிழாசிரியர்களுக்கு பணி யாற்றி வருகின்றது.

பல பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவிசெய்த கார ணத்தால் 'நமது குருநாதர்' எனப்பலராலும் உரிமையுடன் பாராட்டப்பட்ட இவர் சுன் ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல் லூரியின் கனிஷ்ட அதிபராக 15 வருடகாலம் பணிபுரிந் தார்.'' என்னை நன்றாக இறை வன் படைத்தான் தன்னை நன் ருகத் தமிழ் செய்யுமாறே'' என்பதே அமரர் ஆசிரியமணி க. ஆறுமுகத்தின் லட்சியமாக இருந்தது. அவரது பூத உடம்பு மறைந்து விட்டது. ஆனல் இன்றும் புகழுடம்புடன் நிலை த்து வாழுகின்றர்.

எஸ். ஜே ஜெயக்குமார்

தற்போதைய நிலையில்

# பிரச்சினையை நீடித்தால் அரசுக்கு அது நல்லதல்ல

(சரசாலை)

கடந்த மூன்று வருடங்களா கப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டு வருகிறது. குடும்ப பிரச்சினை போல சமூகங்களி டையே மனக்கசப்பு ஏற்பட் டால் காணியை பங்கிடு செய்து பிரச்சினையை தீர்க்கலா மே ஒழிய வேறு வழி இலை யாது. மேறிகொண்டு பிரச் சினையை இழுத் தடித்தால் மிக வும் பாரிய மோசமான நிலை களை இலங்கை அரசு எதிர் கொள்ள வேண்டிவரும்.

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற் றிய ஆசிரியமணி திரு.ஆ.வி. சுப்பிரமணியம்குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையா ற்றுகையில், தினைவிதைத்தவன் தினை அறுப்பான். வினைவிதைத் தவன்வினைஅறுப்பான். 1957ல் பண்டாசெல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து பாதயாத்திரை செய்த ஜனாதிபதி, யார் எதிர்த் தாலும் மாகாண சுயாட்சியை அமுல் நடத்தியே தீருவேன் என இப்போது கூறினர். ஆனல் ஒரு பெரும் சிங்கள எதிர்கட்சி தமிழர் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ் போராளி கள் இயக்கம் இவற்றின் அனு சரணையின்றி இவர் எப்படி அமுல் நடாத்தப் போகிருர் என்பது புதிராக விருக்கிறது தமிழர் பிரச்சினையை வைத்து அரசியல் இலாபம் பெற சிறி மாவோ அம்மையார் முயல்வ தும் நீதியற்ற செயலாகும் என்ருர்.

திரு யோ.ஜெயகுமார் ஆசி ரியர் திரு சி.துரைராசா திரு கே.சின்னத்துரை உட்பட பலர் உரையாற்றினர்.

## இங்கும் சிலுவை ஊர்வலம்

(சுன்னுகம்)

இராணுவ நடவடிக்கையால் உயிரிழந்த வண. பஸ்ரியான், அருட்சகோதரர் வென்ஸ் லொஸ் ஆகிய கத்தோலிக்க மத குருமார்களுக்கும், படு கொலை செய்யப்பட்ட பாஷை யூர் மீனவர்களுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக சிலுவை ஊர்வலமொன்று சுன்னுகம், ஏழாலை, மல்லாகம், குளமங் கால் பங்கு மக்களால் நடத் தப்பட்டது.

ஊர்வலங்கள் சுன்னுகம், ஏழாலை, குளமங்கால் பகுதிக ளில் மும்முனையாக ஆரம்பிக் கப்பட்டு மல்லாகம் சந்தியை வந்தடைந்து புதுமை மாதா தேவாலயம் வரை இடம்பெற் றது. சிறுவர்கள் பெண்கள் உட்பட ஆயிரம் பேர் வரை இவ்வூர்வலத்தில் பங்குபற்றி னர்.

பெரிய அளவிலான சிலுவை யைச் சுமந்தவர்களாகவும், பதாதைகள், சுலோகங்களைத் தாங்கியவர்களாகவும் மௌன மாகவும் நடந்த இவ்வூர்வலத் தால் போக்குவரத்துச் சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. பங் குத் குருமார்களும், பிரஜை கள் குழு உறுப்பினர்களும் இவ்வூர்வலத்தில் கல ந்து கொண்டனர். ஊர்வலத்தினி றுதியில் திருப்பலிப் பூசை ஒப் புக் கொடுக்கப்பட்டதுடன் அஞ்சலிக்கூட்டமும் நடை பெற்றது.

## விசேடகூட்டம்

(வேலணை)

புங்குடுதீவு புனித பிரான் சிஸ் சவேரியார் சனசமூக நிலை யத்தின் விசேட பொதுக் கூட் டம் நிலையத்தலைவர் திரு. வி. லீனஸ் தலைமையில் நடைபெற் றது.

புதிய நிலையத்திற்கான கட் டடம் அமைப்பதற்கு சனசமூக நிலையத் தலைவர் திரு. வெ. செபமாலை தலைமையில் பின் வருவோர் நியமிக்கப்பட்டுள்ள னர்: திரு. ச. அமிர்தராஜா, திரு. பி. ரஞ்சன், திரு. கி. அருளப்பு, திரு. தோ. திருஞா னம், திருமதி யூ. ஜெபாசேஸ் வரி,திருமதி அ. யோன்றேசா. மேற்படி கூட்டத்தில் டாக்டர் எஸ். லோறன்ஸ், திரு. வின் சன் யோட்ஸ் ஆகியோர் சிறப் புரை நிகழ்த்தினர்.

★ அணுவாயுத சோதனைகளை உடனடியாக தடுத்து நிறுத்துதல் பொருட்டான

# கண்காணிப்பதற்கென விரிவான யோசனை!

(மெக்ஸிக்கோ நகர்)

**அணுவாயுத சோதனைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற் காக அவற்றைக் கண்காணிப்பதற்கான விரிவான யோசனை ஒன்றை மெக்சிக்கோவில் நடைபெற்ற ஆறு நாடுகள் உச்சி மாநாடு அறிவித் துள்ளது.**

அணுவாயுதக் குறைப்புக் காக மெக்ஸிக்கோவில் உச்சி மாநாடு நடத்தும் ஆறு அரசுத் தலைவர்கள் அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகனுக்கும், சோவியத் அதிபர் திரு. கொர்பசெவ்வுக்கும் புதிதாகக் கடிதங்கள் எழுதுவதெனத் தீர் மானித்துள்ளனர்.

இக்கடிதங்களின் விபரங்கள் இத்தலைவர்களின் கைகளில் கிடைத்ததும் வெளியிடப்ப டும். ''மெக்ஸிக்கோப் பிரகட னம்'' என்ற ஒன்றையும் கட ந்த வருடப் புதுடில்லிப் பிர கடனத்தின் தொடர் நடவ டிக்கையாக குறிப்பிட்ட அர சுத் தலைவர்கள் இயற்றினர்.

இப்பிரகடனத்துடன் அணு சோதனைகளைக் கண்காணிப்ப தற்கான ஏற்பாடுகளை வகுக் கும் உடன்படிக்கை ஒன்றும் கையெழுத்தாகும்.

எட்டப்படக்கூடிய சோத னைத் தடை உடன்படிக்கை மீறப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும் இந்த ஆறு தலைவர்களும் முன்வந்திருப்ப தாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆறு தலைவர்களும் நெருங்கி ஒத்துழைத்து அணுவாயுதக் குறைப்புக்காக உலக மக்களின் கருத்தைத் திரட்டுவதற்கான முயற்சிகளை அதிகரிப்பதென வும் தீர்மானித்தனர்.

பிரதமர் திரு ராஜீவ் காந்தி உச்சி மாநாட்டிற்கு வந்திருக் கும் தலைவர்களைத் தனி. தனியே சந்தித்துப் பேசினர்ய

சர்வதேச மற்றும் பிராந்தித் விடயங்கள் பற்றி அவர்கள் ஆலோசனை நடத்தினர்கள்.

கிரேக்கப் பிரதம மந்திரி திரு. பப்பந்திரியோவை பார தப் பிரதமர் சந்தித்தபோது விஞ்ஞானத்தில் பாரதம் கண் டிருக்கும் முன்னேற்றத்தை விபரித்தார்.

மேற்கு ஜேர்மனிக்காகச் செயற்கைக் கோள் ஒன்றை பாரதம் செலுத்தப்போவதாக வும் அவர் அப்போது சொன் ஞர்.

## 9 பேர் போட்டி

(சென்னை)

காந்தி- காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியும் இம் மாதம் 31ம் திகதி நடைபெற விருக்கும் அரும்புக் கோட்டை சட்டசபை இடைத்தேர் தலில் போட்டியிடவுள்ளது.

திரு. போல்ராஜ் இங்கு போட்டியிடுவாரென கட்சித் தலைவர் திரு. குமரிஅனந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனதாக் கட்சியும் இங்கு போட்டியிடுகிறது. 9 பேர் இப் போது இங்கு வேட்பாள ராக உள்ளனர்.

வல்வை. நெடிய காட்டில்

# ராணுவ தாக்குதல்களால் பாதிப்புற்றோருக்கு வை.எம்.சி.ஏ. நிவாரண உதவிகள் வழங்கும்

(வல்வெட்டித்துறை)

1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வல்வை நெடிய காட் டில், இராணுவத்தினர் மீது நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலையடுத்து, இராணு வத்தினர் நடத்திய வீடெ ரிப்பு, கொள்ளை, கொலை முத லிய வன் செயல்களால் பாதிக்கப்பட்ட இப் பகுதி மக்களுக்கு வை. எம். சி.ஏ. யினல் அடுத்தவாரம் நிவா ரண உதவி வழங்கப்பட உள் ளது.

இச் சம்பவங்களால் பாதிக் கப்பட்டோரது பெயர் பட்டி யல், வல்வை அகதிகள் புனர் வாழ்வுச் சபையினரால் வல்வையில் பொது இடங்க ளில் ஒட்டப் பட்டுள்ளது.

இப் பட்டியலில் இடம் பெற்றவர்கள் வல்வை அகதி கள் புனர்வாழ்வு சபையினரு டன் தொடர்பு கொண்டு, அவர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல் பிரகாரம், குறிப்பிட்ட திகதிகளில் அவ் வப் பகுதியிலுள்ளவர்கள் யாழ்ப்பாணம், கச்சேரியடியி லுள்ள வை. எம். சி. ஏ. கட் டிடத்தில் வழங்கப்பட இருக் கும் நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒழுங்குகளை செய்துள்ளார்.

போக்குவரத்து கஷ்டங் கள், செலவினங்களை உத்தே சித்து, வை. எம். சி. ஏ. யினல் யாழ்ப்பாணத்தில் வழங்கும் இவ் நிவாரண உதவிகளை, வல்வை அகதிகள் புனர் வாழ்வு சபை அலுவலகத்தி லேயே வழங்கும்படி, பாதிக் கப்பட்டோர் சபை நடத்து னர்களைக் கோரியுள்ளனர்.

வை. எம். சி. ஏ யினல் வழங்கப்படும் சகல பகுதி களுக்குமான, சகல நிவாரண உதவிகளும் வை. எம். சி. ஏ. கட்டிடத்திலேயே வழங்கப் பட்டு வருவதாகவும், பாதிக் கப் பட்டோர் அங்கேயே சென்று பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கூறிய அகதிகள் புனர்வாழ்வுச் சபை செயலர், இங்கு புனர்வாழ்வு சபை அலுவலகத்தில் வழங்க முடயுமா? என்பது பற்றி சம் பந்தப்பட்ட வை. எம் சி. ஏ. அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற் கொள்ள முயற்சிப்பதாகவும் கூறினர்.

## ஏழாலை தெற்கு கிளை முதலிடம்

(சுன்னுகம்)

பாவனையாளர்கள் சிறந்த சேவையினைப் பெற்றுக் கொள்ளுமுகமாக சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங் கம் கிளை நிலையங்களுக் கிடையே போட்டியொன் றினை ஒழுங்கு செய்து பரிசில் வழங்கும் திட்டத்தை நடை முறைப்படுத்தி வருகிறது.

கிளைகளின் அமைப்பு,பொது மக்களுடன் பழகும் பண்பு, பொதுமக்களைத் திருப்திப் படுததுமுகமான வியாபார முறைகள், கூடுதல் விற்பனை மூலம் சங்கத்திற்கு லாபத் தினைக் கூட்டுதல் ஆகிய அம் சங்கள் கவனிக்கப்படுகின்றன.

இவ் வகையாக சங்க எல் லைப் பரப்பில் உள்ள கிளை களுக்குள் நடத்தப்பட்ட கடந்த மாதப் போட்டியில் ஏழாலை தெற்குக் கிளை முத லாவதாகத் தெரிந்தெடுக்கப் பட்டதுடன் அதன் முகாமை யாளருக்குப் பணப் பரிசும் வழங்கப்பட்டது.

உள்நாட்டு...

—4ம் பக்கத் தொடர்ச்சி

தனித்தனியே இயங்குபவை; அவைகளுக்குப் போராளிகளு டன், தமிழர் விடுதலைப் போராளிகளுடன் தொடர்பு உண்டு என நீங்களே கூறியுள் ளீர்கள். அந்த இரண்டு வகை அச்சுறுத்தல்களையும் ஒரே ஜனநாயக முறைபிலா கையா ளப்படவேண்டும்?

விடை; ஜனநாயக முறையில் என்ருல், வன்செயலாளர் எல் லோரையும் ஒரே அளவுகோல் கொண்டு கையாள்வதல்ல. அந்த முறையைப் பிரயோகித் தற்கு, பெரும்பான்மையின ரின் மேலாதிக்க வலிமைத் தத்துவத்தின் எல்லைகள் யாவை? அதனையிட்டும் சிறிது சிறிதாக முடிவு எடுக்கப்பட வேண்டி இருக்கிறது.

அஹிம்சை வழி நிற்போரின் தேசிய பிரதான நீரோட்டத் தினுள் அந்த வன்செயலாளர் களைக் கொண்டு வர நாம் மிக முயல வேண்டி இருக்கிறது. ஆனுல், வன்செயலில் ஈடுபடும் ஒரு சிலர்மீது இம்முயற்சி அற வே பயன்தராது. அத்தகைய சிலரை ஓர் இராணுவப் பய முறுத்தல் அல்லது மிரட்டலா கக் கருதிக் கையாள வேண்டி யிருக்கிறது.

வலிமை தானுகவே ஓர் இலட்சியம் ஆக மாட்டாது. அதனை ஒரு குறிக்கோளாக எண்ணுவது தவறு. வலிமை எங்கே முடிகிறது என்பதை உணர்ந்து இருந்தாலும் முக்கி யமாகும்.

வினு: 'ஜே. வீ. பீ.' ஒரு பாரதூரமான பயமுறுத்தலா? அப்படி நீங்கள் கருதுகிறீர்க ளா?

விடை: வன்செயலால் இலங் கையின் ஆட்சியமைப்பில் மாறுதல் ஏற்படுத்தலாம் என்ற எண்ணத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் ஆம். அப்பொழுது, இலங்கை யின் பாதுகாப்புக்கு அவர்கள் பாரதூரமான ஒரு பயமுறுத் தல் ஆகக்கூடும்.

(நாளை முடியும்)

ஈழமுரசு

# மரத்துடன் நன்ருக் கட்டிவைத்து பச்சை மட்டையால் பூசை!

(கிளிநொச்சி)

இயக்கத்தின் பெயரைக் கூறி பல தில்லுமுல்லு வேலைகளைச் செய்த நபரொருவருக்கு இளைஞர்களினுல் நல்ல பூசை வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் கிளிநொச்சி, கனகபுரம் வீதியிலுள்ள சேவியர் கடைச்சந்தியில் வைத்து மரமொன்ருேடுகட்டி வைக்கப்பட்டு பச்சை தென்னைமட்டை ஞல் இப்பூசை வழங்கப்பட்டது. மேற்படி நபர் தன்னை இயக்கமொன்றின் அங்கத்தவர் எனக் கூறிக்கொண்டு பலரிடம் பணம் வாங்கியதாகவும். பொது மக்களின் பிரச்சினைகளை விசாரணை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

## இனப் பிரச்சினை விவகாரமாக

# பார்த்தசாரதி, நாராயணன், சிதம்பரம் ஆகியோருடன் திலகரத்தின பேச்சு!

[புதுடில்லி]

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம் தொடர்பாக புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்தின நேற்று புதுடில்லியிலுள்ள பிரதான அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசினுர்.

பாரத அரசின் கொள்கைக் குழுத்தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி, மத்திய அரசின் இணை அமைச்சர்கள் கே. ஆர். நாராயணன், பி. சிதம்பரம் ஆகியோரை இவர் சந்தித்துப் பேசியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில நாட்களாக அடுத்தடுத்து இடம்பெற்றுவரும் விடயங்கள் பற்றி திரு. பேர்னுட் திலகரத்தின இங்கு எடுத்துக் கூறினுர்.

பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணும் நிலைமை, தமிழர் கூட்டணியினரின் கொழும்பு விஜயம் ஆகியன பற்றியும் இச் சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

## இன்று

இன்று பிற்பகல் மாவிட்டபுரம் லயன்ஸ் கழக அலுவலகத்தில் மூக்குக் கண்ணுடிச் சட்டத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு மூக்குக் கண்ணுடிச் சட்டங்கள் வழங்கப்படும்.

### சகல கட்சிகளும்...

தீர்வு காணப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினுர். இச்சந்திப்பு சுமார் நாற்பத்திஐந்து நிமிடங்கள் இடம் பெற்றது.

## இறுதிக் கிரியை அழைப்பிதழ்

உதயம்
24-09
|
1981



அஸ்தமனம்
03 08
|
1986

### செல்வன் ஹேமானந்த்
(சுதன்)

3.8.86ல் காலமான எமது மூத்த அன்புச் செல்வன் ஹேமானந்த்(சுதன்) அவர்களின் இறுதிக் கிரியை சித்தங்கேணியில் இ. வரதராசசர்மா அவர்களது இல்லத்தில் 11.8.86 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. தயவு செய்து உற்ருர், உறவினர், நண்பர்கள் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வண்ணம்
சு. வரதகுமார்,
சந்திரவதனி.

R/24660

## மரண அறிவித்தல்

### க. ஜெகராஜா

இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர் திரு. க. ஜெகராஜா காலமானுர். இவர் காலஞ்சென்ற கபிரியேல்பிள்ளை தம்பதியின் கனிஷ்ட புதல்வனும், திரேசாவின் அன்புக் கணவரும், இரத்தினகுமார், ராதா, கீதா, ரஞ்சி, ருேய், ரவி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தேவசகாயம், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், திருமதி அந்தோணிப்பிள்ளை, திருமதி சவரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும், யூட் பஸ்தியாம்பிள்ளையின் அருமை மாமஞரும் ஆவார். ஈமச் சடங்குகள் இன்று (09-08-86) சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு மிருசுவில் புனித. நீக்கிலாஸ் தேவாலயத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

R/24658

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 9-8-1986 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; தொலைபேசி: 22437

# சாவகச்சேரி வீடுடைத்து மூன்றரை லட்சம் கொள்ளை

(சரசாலை)

சாவகச்சேரி வடக்கிலுள்ள வீடொன்றிலிருந்து சுமார் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் பணமும் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாதவர்களால் களவாடப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் நித்திரையில் இருந்த சமயம் ஜன்னலை உடைத்துக்கொண்டு வீட்டினுள் புகுந்தவர்களே இளைப்பாறிய ஆசிரியரும், மண்டுவில் அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவருமான திரு. க. சரவணமுத்து என்பவருடைய வீட்டிலிருந்து மேற்படி நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இங்கிருந்து களவுபோன நகைகளில் மண்டுவில் அம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான சுமார் பத்து பவுண் நகைகளும் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இளைஞன் பலி

(மன்னுர்)

மன்னுர். தலைமன்னுர் வீதியில் ரோந்து சென்ற ராணுவத்தினர் பஸ்ஸிற்கு காவல் நின்ற இளைஞன்மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததினுல் அந்த இளைஞர் ஸ்தலத்தில் பலியானுர். செட்டிகுளத்தைச் சேர்ந்த இவரது சடலம் மன்னுர் ஆஸ்பத்திரியில் ராணுவத்தால் ஒப்படைக்கப்பட்டது. இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

### புங்குடுதீவு...

பட்டது.

நேற்று விடுதலையானவர்களில் மூன்று முஸ்லிம் இளைஞர்களும் அடங்குவர்.

### நெடுந்தீவு...

நெடுந்தீவின் பாடசாலைகளில் ஏற்பட்டிருந்த பல்வேறு குறைகளும் நீக்கப்பட்டு மாணவர் சிறந்த கல்வியைப் பெறச் சந்தர்ப்பம் ஏற்படும் என நம்பப்படுகின்றது. நெடுந்தீவுக் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபராக திரு. எஸ். சின்னத்தம்பி நியமனம் பெறவுள்ளதாக அறியப்படுகின்றது. இவர் தற்பொழுது கிளிநொச்சிப் பாடசாலைகளின் கொத்தணி அதிபர் என்பது குறிப்பிடக்கூடியதாகும்.

### கம்பியூட்டர்..

தற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் பலர் தொடர்ந்தும் தாம் முன்னர் பாவித்த ஓய்வூதியப் பற்றுச் சீட்டுக்களையே வங்கிகளில் சமர்ப்பித்து வருகின்ருர்கள்.

ஆவணி மாதத்திலிருந்து முன்னர் பாவித்த ஓய்வூதியப் பற்றுச் சீட்டுக்கள் வங்கிகளில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் கிடைக்கப் பெருதோர் நேரடியாக கச்சேரி ஓய்வூதியக் கணக்காளர் அல்லது உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு அதற்கேற்ற ஒழுங்குகளை செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில ஓய்வூதிய காரர்கள் தமது விலாசததை அறிவிக்காததினுல் அவர்களுக்குரிய ஓய்வூதியப் பற்றுச்சீட்டுக்கள் அனுப்பப்படவில்லை. அவர்கள் தமது விலாசங்களை கச்சேரியில் கொடுத்து தமக்குரிய ஓய்வூதிய பற்றுச்சீட்டினைப் பெறறுக்கொள்ள முடியும்.

### மயக்கத்தை...

யாளங்காட்டாத போதிலும், ''விடுதலைப் போராளிகள் குழுக்கள் பலவுண்டு அவற்றில் ஒரு குழுவினது கருத்துக்களை ஒலிபரப்பும் உத்தியோக பூர்வ நிறுவனமே தமிழீழத்தின் குரல்'' எனத் தெரிவிக்கின்றனர்.

இவ்வானெலி ஒலிபரப்பு தினமும் காலையும், மாலையும் ஒவ்வொரு மணி நேரம் ஒலிபரப்பாகின்றது. இதில் திரைப் படப் பாடல்களும், உள்ளூர், வெளியூர் செய்திகளும் சக்தி வாய்ந்த அலை வரிசைகளில் ஒலிபரப்பாகிறது.

### புதிய ராணுவ...

இங்கு பதவியேற்பார். திரு. ஜெரி சில்வா முன்னர் கோட்டையிலும், பலாலியிலும் உயர் அதிகாரியாக கடமையாற்றியவர்என்பது குறிப்பிடத்தக்கது.

### பி. பி. ஸி....

யுடன் செயற்படாமையினுல் தான் திரு. ஹொக்ஸி நாட்டை விட்டு வெளியேறுமாறு பணிப்புரை வழங்கப்பட்டதாக லண்டனிலுள்ள இலங்கைத் தூதுவராலயம் அறிவித்துள்ளது. எனினும் அவர் நடுநிலைமையுடன் உண்மைநிலை வழுவாது செயற்பட்டு வந்ததாக பி.பி. ஸி. அறிவித்துள்ளது. இவருக்கு முன்னர் இலங்கையில் பி.பி.ஸி. நிருபராக இருந்தவரும் இதே வகையில் இலங்கையை விட்டு வெளியேற்றப்பட்டிருந்தமை வாசகர் அறிந்ததே.

### ஆஸ்பத்திரி...

நொச்சி வைத்தியசாலை இயங்க முடியாத நிலையில் மூடப்பட்டே உள்ளது.

இதனுல் இங்குள்ள சுமார் எழுபது டாக்டர்களும், ஊழியர்களும் வேறு வைத்திய சாலைகளுக்குத் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டார்கள். இங்கிருந்த அம்புலன்ஸ் வண்டியும், வேருெரு வைத்தியசாலையின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் — இராணுவ கூட்டு முகாம் வைத்தியசாலைக்கு அருகாமையிலேயே உள்ளதால் வைத்தியசாலை ஊழியர்கள் இங்கு கடமைக்குச் செல்ல அச்சம் தெரிவித்துள்ளார்கள். இங்கிருந்து களவுபோன பொருட்களின் பெறுமானத்தை சரியாக அறியமுடியாமலுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## அகதிகளுக்கு அன்பளிப்பு

(வல்வெட்டித்துறை)

1984-ம் வருடம் வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் ரோந்துவந்த இராணுவத்தினர் மீது போராளிகள் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொண்டதை அடுத்து நெடியகாடு, பொலிகண்டி, ஆதிகோவிலடி ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளை எரித்தும், உடைத்தும், கொள்ளையடித்தும் சேதப்படுத்தியதால் பாதிக்கப்பட்ட சுமார் மூன்னூறு குடும்பங்களுக்கு கடந்த இருதினங்களாக 'ஒக்ஸ்வம்' நிறுவனத்தினரால் சுமார் ரூபா 500/- பெறுமதியான உடுபிடவைகள் அடங்கிய அன்பளிப்புப் பொதியினை யாழ். வை. எம். சி. ஏ. அலுவலகத்தில் வழங்கினர்.

## பரீட்சைக்கு மற்ருெரு திகதி

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்திற்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான எழுத்துத் தேர்வு பரீட்சை 16ம் திகதி சனிக்கிழமை நடைபெறமாட்டாதென அறிவிக்கப்படுகிறது. இது 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் புதிய மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வு முன் அறிவித்தபடி 18ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

## எச்சரிக்கை

(அரியாலை)

அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் தனது எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோதக் கள் விற்பனையை முற்ருகத் தடை செய்யத் தீர்மானித்துள்ளது. இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் சகல விற்பனை நிலையங்களும் மூடப்படவேண்டும் எனவும், இதனை மீறுவோரின் பாத்திரங்கள், வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## லொறி மறித்து பணம் கொள்ளை

வவுனியாவிலிருந்து அனுராதபுரத்துக்குச் சென்ற நெல்லு லொறியிலிருந்து சுமார் நாற்பத்தையாயிரம் ரூபா வழியில் ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்றினுல் கொள்ளையடிக்கப்பட்டது.

## முடிவு திகதி நீடிப்பு

(வண்ணுர்பண்ணை)

யாழ். பல்கலைக்கழகத்தின் சித்தவைத்தியத்துறையில் சேர்ந்து பயில்வதற்கான விண்ணப்பங்களின் முடிவுத்திகதி நாளையுடன் பூர்த்தியாகின்றது. எனினும் மாணவர்களின் நன்மைகருதி இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கபபட்டிருப்பதுடன் தகுதியுடைய மாணவர்கள் உடனடியாக சிரேஷ்ட உதவிப் பதிவாளரைச் சந்தித்து இதற்கான விண்ணப்பங்களைப் பெற்று அனுப்பிவைக்கலாம் என சித்தமருத்துவத்துறை தலைவர் டாக்டர் எஸ். பவானி அறிவித்துள்ளார்.